JMC, Thiruvadanai-CC No.29/2023
Judgment Dated: 07.03.2026

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ம் நாள் சனிக்கிழமை

ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 29/2023
CNR No. TNRM17-000132-2023

| | | | |
|---|---|---|---|
| 1. | வரிசை எண். | : | C.C.No.29/2023 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையம் குற்ற எண். 258/2020 |
| **எதிரியின் விபரம்** | | | |
| 3. | பெயர் | : | சத்தியமூர்த்தி |
| 4. | த/பெ. | : | நாகேந்திரன் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | முகவரி | : | சேத்திடல்,<br>ஆர்.எஸ் மங்கலம் தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | வயது | : | வயது 31/2020 |
| 8. | சம்பவ நாள் | : | 06.08.2020 ம் தேதி 18.00 மணி |
| 9. | புகார் தேதி | : | 07.08.2020 ம் தேதி 18.30 மணி |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | எதிரி மாண்புமிகு இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P.No. 1892/2020, Date 19.08.2020 உத்தரவின்படி முன்பிணை பெற்றுவிட்டபடியால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | எதிரி மாண்புமிகு இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P.No. 1892/2020, Date 19.08.2020 உத்தரவின்படி முன்பிணை பெற்று 21.08.2020 ம் தேதி |

JMC, Thiruvadanai-CC No.29/2023
Judgment Dated: 07.03.2026

| | | | |
|---|---|---|---|
| | | | தகுந்த ஜாமின்தாரர்களை நிறுத்தி பிணையில் சென்றுள்ளார். |
| 12. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 15.09.2023 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.02.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | --இல்லை-- |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 – முதல் விசாரணை – 19.12.2023<br>குறுக்கு விசாரணை – 19.12.2023<br>அ.சா.2 – முதல் விசாரணை – 21.02.2024<br>குறுக்கு விசாரணை – 21.02.2024<br>அ.சா.3 – முதல் விசாரணை – 21.02.2024<br>குறுக்கு விசாரணை – 21.02.2024<br>அ.சா.4 – முதல் விசாரணை – 21.02.2024<br>குறுக்கு விசாரணை – 21.02.2024<br>அ.சா.5 – முதல் விசாரணை – 25.07.2024<br>குறுக்கு விசாரணை – 25.07.2024<br>அ.சா.6 – முதல் விசாரணை – 14.10.2025<br>குறுக்கு விசாரணை – 14.10.2025<br>அ.சா.7 – முதல் விசாரணை – 13.11.2025<br>குறுக்கு விசாரணை – 13.11.2025<br>அ.சா.8 – முதல் விசாரணை – 03.02.2026<br>குறுக்கு விசாரணை – 03.02.2026 |
| 18. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 13.02.2026 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின்படியான மனுக்கள் | : | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திருமதி.ஜூட் ஏஞ்சலோ |
| 22. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.K.ரமேஷ் |
| 23. | எதிரியின் கூற்று | : | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவாக, எதிரி பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 19.01.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்பு 24.02.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. <u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் :–</u>

கடந்த 06.08.2020 ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரரான மலர்மணி என்பவரும் அவரது தந்தையான லெட்சுமணன் என்பவரும் தங்களது சொந்த வேலையாக

ஆட்டோவில் ஏறி கூட்டாம்புளி விலக்கு ரோடு அருகே வரும்போது மாலை 18.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி சத்தியமூர்த்தி, புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே வாய்த்தகராறு காரணமாக இருந்து வந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு எதிரி ஓட்டி வந்த டிப்பர் லாரியை ஊரிலிருந்து எடுத்து வந்தவர் லாரியை நிறுத்திவிட்டு, எதிரியானவர் புகார்தாரர் வந்த ஆட்டோவை வழிமறித்து லாரியில் உள்ள இரும்பு லீவரை எடுத்து வந்து புகார்தாரரை பெண் என்றும் பாராமல் அசிங்கமாக கண்டார ஓழி, தேவுடியா என்று கேட்டு கையில் வைத்திருந்த இரும்பு லீவரால் புகார்தாரரின் வயிற்றில் அடிக்க வந்தபோது அதை தடுத்த புகார்தாரரின் தந்தை லெட்சுமணனை காலால் மிதித்து கீழே தள்ளியும், பின்பு புகார்தாரரின் வலதுபக்க கன்னத்தில் கையால் அறைந்தும், காலால் மிதித்து கீழே தள்ளிவிட்டும், மேலும் தன் கையில் வைத்திருந்த லீவரை காண்பித்து புகார்தாரரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துச் சென்ற குற்றம் புரிந்ததாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4 TNPHW Actன் கீழ் ஆர்.எஸ்.மங்கலம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கின் எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்ததில், எதிரி முதல்நோக்கில் குற்றத்தினை செய்திருக்கலாம் என அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்ததால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4 TNPHW Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்துக் காட்டி, விளக்கிக்கூறி வினவிய போது எதிரி

குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே, அரசு தரப்புச் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சியமும் அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்து வைக்கப்பட்டது.

5. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சுருக்கம்</u> :–

கடந்த 06.08.2020ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மலர்மணி என்பவரும் அவரது தந்தையான லெட்சுமணன் என்பவரும் தங்களது சொந்த வேலையாக ஆட்டோவில் ஏறி கூட்டாம்புளி விலக்கு ரோடு அருகே வரும்போது மாலை 18.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி சத்தியமூர்த்தி, அ.சா.1 ற்கும் எதிரிக்கும் இடையே வாய்த்தகராறு காரணமாக இருந்து வந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு எதிரி ஓட்டி வந்த டிப்பர் லாரியை ஊரிலிருந்து எடுத்து வந்தவர் லாரியை நிறுத்திவிட்டு, எதிரியானவர் அ.சா.1 வந்த ஆட்டோவை வழிமறித்து லாரியில் உள்ள இரும்பு லீவரை எடுத்து வந்து அ.சா.1 ஐ பெண் என்றும் பாராமல் அசிங்கமாக கண்டார ஓழி, தேவுடியா என்று கேட்டு கையில் வைத்திருந்த இரும்பு லீவரால் அ.சா.1 ன் வயிற்றில் அடிக்க வந்தபோது அதை தடுத்த அ.சா.1 ன் தந்தை லெட்சுமணனை காலால் மிதித்து கீழே தள்ளியும், பின்பு அ.சா.1 ன் வலதுபக்க கண்ணத்தில் கையால் அறைந்தும், காலால் மிதித்து கீழே தள்ளிவிட்டும், மேலும் தன் கையில் வைத்திருந்த லீவரை காண்பித்து அ.சா.1 ஐ பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துச் சென்றுள்ளார். மேற்படி சம்பவத்தை அ.சா.2 லெட்சுமணன், அ.சா.3 நாகராஜ் ஆகியோர்கள் பார்த்தார்கள்.

5(2) அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரிக்கும் தனது மாமனாருக்கும் ஏற்கனவே இடப்பிரச்சினை சம்மந்தமாக தாங்கள் பேசிக்கொள்ள மாட்டோம் என்றும் 06.08.2020ம்

தேதி மாலை 06.30 மணிக்கு கூட்டாம்புளி ஊருக்குள் தான் தனது அப்பா லெட்சுமணன் ஆட்டோவில் வந்தபோது எதிரி லாரியில் வந்து லாரியை நிப்பாட்டி லாரியிலிருந்து கடப்பாறை எடுத்து தங்களை குத்த வந்ததாகவும், ஊரில் இருந்தவர்கள் எல்லோரும் பிடித்துவிட்டதாகவும், அதன்பிறகு லாரியை எடுத்து கொண்டு எதிரி தப்பித்து விட்டதாகவும், சம்பவத்தால் தனக்கும், தனது அப்பாவுக்கும் மயக்கம் வந்துவிட்டதாகவும், உடனே தங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதாகவும், பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆர்.எஸ்.மங்கலம் போலிசார் வந்து தன்னிடம் என்ன நடந்தது என கேட்டதாகவும், தான் நடந்ததை சொன்னதாகவும், போலிசார் எழுதி கொண்டதாகவும் தற்போது தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார்மனு தான் அது, அதிலுள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் சம்பவம் ஊருக்குள் நடக்காமல் வெளியில் நடந்திருந்தால் தானும் தனது அப்பாவும் இறந்தே போயிருப்போம் என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

5(3) அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகள் ஆவார் என்றும் எதிரியை தனக்கு தெரியும் என்றும் சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை மாலை 04.00 மணியளவில் தான் ஆர்.எஸ்.மங்கலம் சென்றுவிட்டு விட்டிற்கு வரும்போது எதிரி டிப்பர் லாரியை தனது மகள் வீட்டு முன்பு நிறுத்திவிட்டு மது அருந்திவிட்டு சண்டை போட்டுக்கொண்டு தனது மகளை என்னடி கண்டார ஓழி என்னடி பன்னி புடுவ என்று அசிங்கமாக திட்டிக் கொண்டிருந்ததாகவும், பின்னர் தானும், தனது மகளும் நாகராஜன் என்பவரை அழைத்துக்கொண்டு ஆட்டோவில் காவல் நிலையம் செல்வதற்காக கிளம்பும்போது எதிரி கடப்பாரையை வைத்து ஆட்டோ டயரை குத்தி பஞ்சர் ஆக்கிவிட்டதாகவும், பின்னர் வண்டியில் இருந்து இறங்கி விட்டதாகவும், எதிரி கடப்பாரையால் தன்னை குத்த வரும்போது தான் விலகி விட்டதாகவும், மீண்டும் குத்த வரும்போது தானும் தனது மகளும் கடப்பாரையை

பிடித்துவிட்டதாகவும், அப்போது எதிரி தனது மகளின் வயிற்றில் காலால் மிதித்து தள்ளிவிட்டதாகவும், தனது மகள் தன்னை கொல்ல போகிறார் கொல்ல போகிறார் ஓடி வாருங்கள் என்று கத்தியதாகவும், ஊர் பொதுமக்கள் வந்து சண்டையை விலக்கி விட்டதாகவும், டிராக்டரை மடக்கி நிப்பாட்டி விட்டதாகவும், தனது மகள் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டதாகவும், பிறகு தங்கள் ஊருக்கு இரண்டு போலிசார் வந்ததாகவும் போலிசார் வந்தவுடன் எதிரி தப்பி ஓடிவிட்டதாகவும், போலிசார் விரட்டி சென்றதாகவும் பின்னர் சம்பவம் நடந்தவுடன் தாங்கள் ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு பின்னர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கு போலிசார் வந்ததாகவும், இது சம்பந்தமாக தன்னை போலிசார் விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

5(4) அ.சா.3 தனது சாட்சியத்தில் தேதி, மாதம் வருடம் நினைவில் இல்லை என்றும் அ.சா.1 ஐ ஆட்டோவில் அழைத்துச் சென்றதாகவும், கூட்டாம்புளி அருகே சென்றபோது ஆட்டோவை நிறுத்த சொன்னார்கள் தான் நிறுத்தியதாகவும், அதன்பிறகு அவர் இறங்கிவிட்டதாகவும், தான் ஊருக்கு சென்றுவிட்டதாகவும், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

5(5) அ.சா.4 தனது சாட்சியத்தில் 2020ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை மாலை 04.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் முன்பு எதிரி டிப்பர் லாரியை வைத்துக்கொண்டு அ.சா.1ன் வீட்டில் ஏற்ற சென்றதாகவும், தனது வீடு அ.சா.1ன் வீட்டின் 100 மீட்டர் பக்கத்தில் உள்ளதாகவும், பின்னர் அ.சா.1 தனக்கு போன் செய்து மேற்படி சண்டையை பற்றி சொல்லி எதிரி மது அருந்திவிட்டு வந்து சண்டை செய்வது பற்றி சொல்லி தன்னை வரச்சொன்னதாகவும், பின்னர் தான் சம்பவ இடத்திற்கு சென்று அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை ஆட்டோவில் ஏற்றி காவல் நிலையம் அனுப்பி வைத்ததாகவும், கூட்டாம்புலி அருகே எதிரி அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை மறித்து

அ.சா.1 ஐ கடப்பாறையல் அடித்துவிட்டதாகவும், அப்போது அந்த வழியாக வந்தவர்கள் தகவல் சொன்னதாகவும் தான் சென்று அ.சா.1 ஐ இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என சாட்சியமளித்துள்ளார்.

5(6) அ.சா.5 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள அ.சா.ஆ.2 முதலாவது கையெழுத்து தன்னுடையதான் என்றும் அந்த கையெழுத்தை தான் 07.08.2020ம் தேதி இரவு 07.30 மணியளவில் ஆர்.எஸ்.மங்கலத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது கூட்டாம்புளி விளக்கு அருகில் கூட்டமாக இருந்ததாகவும் உடனே தானும், தன்னுடன் வந்த சரத்குமார் என்பவரும் அங்கு நின்று என்ன நடந்தது என்று பார்த்ததாகவும் மலர்க்கொடிக்கும், சத்தியமூர்த்திக்கும் சண்டை ஏற்பட்டு அதில் மலர்கொடியை சத்தியமூர்த்தி அடித்ததாக கேள்விப்பட்டதாகவும், அப்போது அங்கு ஆர்.எஸ்.மங்கலம் போலீசார் தன்னையும், சரத்குமாரையும் சாட்சி கையெழுத்து போடச் சொன்னதாகவும், எழுதிய பேப்பரில்தான் தானும், சரத்குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டுக் கொடுத்ததாகவும், தற்போது சரத்குமார் வெளிநாட்டில் உள்ளதாகவும், அதன்பிறகு போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

5(7) அ.சா.6 தனது சாட்சியத்தில், கடந்த 07.08.2020 தேதி மாலை 7.30 மணியளவில் ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் தனது ஊர் அருகில் உள்ள கூட்டாம்புளி என்னும் ஊரில் இவ்வழக்கின் புகார்தாரருக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட பிரச்சனையை குறித்து விசாரித்து கொண்டிருந்ததாகவும், தானும் மேற்படி சார்பு ஆய்வாளர் விசாரணை செய்யும்போது அவ்விடத்தில் தான் இருந்ததாகவும், மேற்படி சார்பு ஆய்வாளர் இவ்வழக்கு குறித்து விசாரணை செய்ததற்கு தன்னை சாட்சி கையொப்பம் இட சொல்லி கேட்டதாகவும், தானும் சாட்சி கையொப்பம் போட்டுக்

கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள அ.சா.ஆ.3 இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் தன்னுடன் சுப்ரமணி என்ற நபரும் சாட்சி கையொப்பம் போட்டு கொடுத்ததாகவும், போலிசார் தன்னை விசாரித்தனர் என சாட்சியம் அளித்துள்ளார்.

5(8) அ.சா.7 தனது சாட்சியத்தில், தான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 07.08.2020 தேதி மாலை 6.00 மணியளவில் தான் மேற்படி மருத்துவ கல்லூரியில் இதே பணியில் இருந்தபோது ஆர்.எஸ்.மங்கலம் சேத்திடல் கிராமத்தை சேர்ந்த மலர்மணி என்னும் 30 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் தன்னை தனது வீட்டில் வைத்து தெரிந்த ஒரு நபர் இரும்பு கம்பியால் முந்தைய தினம் மாலை 4 மணியளவில் தாக்கியதாக சொல்லி சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அவரை ஆஸ்பிட்டல் நம்பர் 38557 பிரகாரம் சிகிக்சைக்கு அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அதன்பின் மேற்படி நபருக்கு ஏற்பட்டு இருந்த காயத்தின் தன்மையை ஆராய்ந்து சாதாரண காயச்சான்று என அ.சா.ஆ.4 காயச்சான்றிதழ் வழங்கிதாகவும், போலிசார் தன்னை விசாரித்தனர் என சாட்சியம் அளித்துள்ளார்.

5(9) அ.சா.8 தனது சாட்சியத்தில், கடந்த 30.06.2024 ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் கோவிலாங்குளம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன் என்றும் கடந்த 07.08.2020 தேதி மாலை 17.00 மணிக்கு ஆர்.எஸ்.மங்கலம் சார்பு ஆய்வாளராகிய தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சேத்திடல் கிராமத்தை பாண்டி மனைவி மலர்மணி என்பவரை விசாரணை செய்து அவர் கொடுத்த புகார்மனுவை பெற்று 18.30 மணிக்கு நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப

ஆர்.எஸ்.மங்கலம் காவல்நிலைய குற்ற எண்.258/2020, பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC மற்றும் பிரிவு 4 TNPHW Act–ன் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

5(10) பின்னர் வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்து கொண்ட மேற்படி சார்பு ஆய்வாளர் 07.08.2020 தேதி 19.30 மணிக்கு சம்பவயிடமான சேத்திடல் செல்லும் ரோட்டில் கூட்டாம்புளி சந்திப்பு சென்று சாட்சிகள் சுப்ரமணி, சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.6 பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்துள்ளார்.

5(11) பின்னர் சாட்சிகள் அ.சா.1 மலர்மணி, அ.சா.2 லெட்சுமணன், அ.சா.3 நாகராஜ், அ.சா.4 தர்மராஜ், அ.சா.5 சுப்ரமணி, அ.சா.6 சரத்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் காயம்பட்ட நபருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் மதிவாணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று பெற்றுள்ளார். வழக்கின் எதிரியான சத்தியமூர்த்தி இராமநாதபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்மீது கைது நடடிவக்கை மேற்கொள்ளவில்லை

5(12) பின் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC மற்றும் பிரிவு 4 TNPHW Act–ன் கீழ் ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம்

கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் படித்துக்காட்டி விளக்கிக்கூறி வினவிய போது, எதிரி அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கும் பொய் வழக்கென்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4 TNPHW Act–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

8. கடந்த 06.08.2020ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மலர்மணி என்பவரும் அவரது தந்தையான லெட்சுமணன் என்பவரும் தங்களது சொந்த வேலையாக ஆட்டோவில் ஏறி கூட்டாம்புளி விலக்கு ரோடு அருகே வரும்போது மாலை 18.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி சத்தியமூர்த்தி, அ.சா.1 ற்கும் எதிரிக்கும் இடையே வாய்த்தகராறு காரணமாக இருந்து வந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு எதிரி ஓட்டி வந்த டிப்பர் லாரியை ஊரிலிருந்து எடுத்து வந்தவர் லாரியை நிறுத்திவிட்டு, எதிரியானவர் அ.சா.1 வந்த ஆட்டோவை வழிமறித்து லாரியில் உள்ள இரும்பு லீவரை எடுத்து வந்து அ.சா.1 ஐ பெண் என்றும் பாராமல் அசிங்கமாக கண்டார ஓழி, தேவுடியா என்று கேட்டு கையில் வைத்திருந்த இரும்பு லீவரால் அ.சா.1ன் வயிற்றில் அடிக்க வந்தபோது அதை தடுத்த அ.சா.1ன் தந்தை லெட்சுமணனை காலால் மிதித்து கீழே தள்ளியும், பின்பு அ.சா.1ன் வலதுபக்க கண்ணத்தில் கையால் அறைந்தும், காலால் மிதித்து கீழே தள்ளிவிட்டும், மேலும் தன் கையில் வைத்திருந்த லீவரை காண்பித்து அ.சா.1 ஐ பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்ததாக எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC

மற்றும் பிரிவு 4 TNPHW Act–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களை நன்கு கூர்ந்து கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் தனது வாதுரையில் வழக்கின் புகார்மனுவை ஒத்துரைத்து, வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சாட்சியம் அளித்திருப்பதாகவும், அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.4, அ.சா.5, அ.சா.6, அ.சா.7, அ.சா.8 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்கள் எதிரியின் குற்றச் செயல்களை இணைக்கக்கூடிய வகையில் இருப்பதாகவும், இவ்வழக்கு முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரி பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC மற்றும் பிரிவு 4 TNPHW Act–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என வாதிட்டார்.

10. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதாகவும், இவ்வழக்கில் புகார்தாரர் தாமதமாக புகார் அளித்திருப்பதாகவும், புலன்விசாரணை அதிகாரியால் இவ்வழக்கு முறையாக புலன்விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எனவே, எதிரியை மேற்படி குற்றவினைக்கு உள்ளாக்குவது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது புகார்மனு மற்றும் முதல் விசாரணையில் தனக்கும் எதிரிக்கும் முன்பிரச்சனை உள்ளதாக வெளிப்படையாக தெரிவித்திருக்கும் நிலையில், "Enmity is a double edged sword" என்கிற நியமத்தின்படி புகார்தாரர் மற்றும் அவரது உறவினர்களான ஏனைய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மிகவும் கவனமாக பரிசீலிக்கும் கடமை இந்நீதிமன்றத்திற்கு உள்ளது.

அவ்வாறு பரிசீலிக்கையில் புகார்தாரரான அ.சா.1 தனது முதல் விசாரணையில் தான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது போலிசார் அங்கு வந்து விசாரித்து புகார் எழுதிக் கொண்டார்கள் என தெரிவித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்த மறுநாள் புகார்மனுவை தான் எழுதி கொடுத்ததாக தெரிவித்துள்ளார். மேலும், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றொரு நபர் என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 தாங்கள் சம்பவத்தன்றே காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு அதன்பின் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ.1 புகார்மனுவை பார்க்கையில் அதில் சம்பவத்திற்கு மறுநாளான 07.08.2020 ம் தேதி மாலை 18.30 மணிக்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார்மனு என தெரியவருகிறது. புகார்மனு கொடுக்கப்பட்ட இடத்தையும், நேரத்தையும் குறித்து அ.சா.1 ன் சாட்சியமும், ஆ.சா.ஆ.1 சான்றாவணமும் முரண்பாடாக இருப்பதால் அ.சா.1 சொல்லியுள்ளவாறு சம்பவம் நடைபெற்றதா எனும் சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது.

12. மேலும், இவ்வழக்கில் சம்பவமானது 06.08.2020 ம் தேதி மாலை 06.30 மணிக்கு நடைபெற்றதாக சொல்லப்படும் நிலையில் புகாரானது 07.08.2020 ம் தேதி மாலை 18.30 மணிக்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. புகார் அளிப்பதற்கு ஏற்பட்ட மேற்படி 24 மணி நேரம் காலதாமதத்திற்கான காரணத்தை அரசு தரப்பு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ தெளிவாக எடுத்துரைக்காத நிலையில், புகார் அளிப்பதற்கு ஏற்பட்ட காலதாமதமானது அரசு தரப்பு வழக்கினை பாதிக்கும் விதமாக அமைந்துள்ளது.

13. இவ்வழக்கில் சம்பவத்தால் பாதிக்கபட்ட மற்றும் சம்பத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2, அ.சா.1 ன் தகப்பனாராக இருப்பதாலும், அ.சா.1 ன் குடும்பத்திற்கும்

எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் உள்ளதாலும், சம்பவத்தை கண்ணுற்ற தனிநபர் சாட்சியான அ.சா.3 ன் சாட்சியம் இவ்வழக்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஆனால், அ.சா.3 தனது சாட்சியத்தில் சம்பவம் நடைபெற்றதாகவும், எதிரி சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் எவ்வித சாட்சியமும் அளிக்காததும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கினை கூடுதல் பாதிப்படைய செய்கிறது.

14. மேலும் அ.சா.2, அ.சா.4 தங்களது சாட்சியங்களில் வழக்கு சம்பவத்திற்கு முன்னதாக அன்றைய தினமே எதிரி அ.சா.1 ன் வீட்டிற்கு முன்பு வந்து பிரச்சனை செய்ததாக சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால், அ.சா.1 தான் அளித்த புகார் மனுவிலோ, தனது முதல் விசாரணை சாட்சியத்திலோ அவ்வாறான சம்பவம் எதையும் குறிப்பிடாத நிலையில், வழக்குச் சம்பவம் உண்மையாக அரங்கேறியதா எனும் சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகிறது.

15. மேலும் அ.சா.1 ற்கு மருத்துவ சிகிச்சை வழங்கிய நிபுணர் சாட்சியான அ.சா.7 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.1, 07.08.2020 ம் தேதி மாலை 06.00 மணியளவில் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்ததாக தெரிவித்துள்ளார். சம்பவமானது நடைபெற்றதாக சொல்லப்படும் 06.08.2020 ம் தேதி மாலை 06.30 மணியிலிருந்து சுமார் ஒரு நாள் காலதாமதமாக அ.சா.1 சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனை சென்றிருப்பதால் "Enmity is a double edged sword" என்கிற நியமத்தின்படி புகார்தாரர் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் புகார் அளித்திருக்கலாம் என்ற சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது. மேலும் அ.சா.7 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.1 ற்கு வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை என சாட்சியம் அளித்துள்ளார். இரும்பு லீவரால் எதிரி அ.சா.1 ஐ தாக்கியதாக அரசு தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், அ.சா.1 ற்கு வெளிப்புற காயங்கள் எதுவும் ஏற்படாதது

அ.சா.1 வழக்குச் சம்பவத்தை மிகைப்படுத்தி முன்னிலைப்படுத்துகிறரா எனும் சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது.

16. மேலும், போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து அ.சா.ஆ.6 பார்வை மகஜர், அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்து அ.சா.5, அ.சா.6 தங்கள் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள போதிலும், அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் தான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாகவும், அ.சா.5, அ.சா.6 தாங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தங்களுக்கு தெரியாது என்று தங்களது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பதாலும், வழக்கின் முக்கிய சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்திற்கு பல்வேறு சந்தேகங்களை எழுப்புவதால் பார்வை மகஜர் சாட்சிகளின் சாட்சியங்கள் இவ்வழக்கில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

17. இவ்வழக்கில் புகார்மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறித்து அ.சா.8 சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கில் எதிரியின் குற்றச் செயலை குறித்து அ.சா.1, அ.சா.2 முன்னுக்கு பின் முரணாகவும் வழக்கு சம்பவத்தை மிகைப்படுத்தியும் சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரியின் குற்றசெயலை இணைக்க கூடிய வகையில் வழக்கின் பிற சாட்சிகளின் சாட்சியங்கள் அமையாததாலும் எதிரியின் குற்றச்செயலை அரசு தரப்பு சாட்சிகளின் வாயிலாக ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்பதாக கண்டு அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல மேற்படி குற்றச்சம்பவம் நடைபெற்றதா என எழும் சந்தேகத்தின் பலனை மேற்படி எதிரிக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. இறுதியாக, எதிரி பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) IPC மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

19. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்ல, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் நேரடியாக அதை கணிணியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.07 17:53:46 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திருமதி. மலர்மணி |
| 2 | அ.சா.2 | திரு. லட்சுமணன் |
| 3. | அ.சா.3 | திரு. நாகராஜ் |
| 4. | அ.சா.4 | திரு. தர்மராஜ் |
| 5. | அ.சா.5 | திரு. சுப்ரமணியன் |
| 6. | அ.சா.6 | திரு. சரத்குமார் |
| 7. | அ.சா.7 | திரு. மதிவாணன்(மருத்துவர்) |
| 8. | அ.சா.8 | திரு. நாகநாதன்(சார்பு ஆய்வாளர்) |

<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 07.08.2020 | புகார்மனு |
| 2. | அ.சா.ஆ.2 | 07.08.2020 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் |

| | | | |
|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | 07.08.2020 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ.4 | 07.08.2020 | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் |
| 5. | அ.சா.ஆ.5 | 07.08.2020 | முதல் தகவல் அறிக்கை |
| 6. | அ.சா.ஆ.6 | 07.08.2020 | பார்வை மகஜர் |
| 7. | அ.சா.ஆ.7 | 07.08.2020 | மாதிரி வரைபடம் |

அரசுத் தரப்பு சான்றுப் பொருட்கள்:—
—இல்லை—

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :—
—இல்லை—

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.07 17:53:53 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :—
1. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

——உண்மை நகல்——

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.07 17:53:58 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.